முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1620

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.03.2024,** புதன்கிழமை

1. தர்ம ராஜனே அரங்கா
தவபலம் கொண்ட தேசிகா
பெருமைமிக்க தர்மம் வழங்கி
பேருலகையே தர்மலோகம் ஆக்குகின்ற
2. ஆக்குகின்ற குருராஜனே அரங்கனே
ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது சால் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 23 ம் நாள், 06.03.2024, புதன்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு சக்தி கூடிட
தண்டாயுதன் யான் நித்தம் பிரம்ம வேளையில்
அண்ணலுக்கு ஆக்க சக்தியாக
ஆற்றல் கூட்டும் சூட்சும சக்தியாக இருந்து இயக்குகின்றேன்
4. இயக்கவே தர்ம ராஜன் இந்த உலகினில்
எண்ணப்படி வந்த நோக்கம் பூர்த்தி கொள்ள
தயக்கமின்றி ஆறுமுகன் பெரும் துணையாய் நின்று
தன்னார்வ தொண்டர்படைகளை
5. படைகளை அரங்கன் சீடர்களாக
பாருலகமெல்லாம் நிரப்பி இனிதே
சோடையின்றி உலக மாற்றத்தை
சுத்த சைவ நெறியைக் கொண்டே
6. கொண்டே ஆறுமுகன் யான் நடத்துவேன் இயக்குவேன்
அரங்கனை எழுந்து நடந்து ஆற்றல்பட இயங்கி
பேருலகமெல்லாம் வலம் வரும் வண்ணம்
பிசகின்றி சூட்சும பலம் கூட்டி

7. கூட்டியே உலக மாற்றம் நடத்துவேன்
குரு அரங்கன் அவதாரத்தின் மகிமையாக
உற்றதொரு உலகோர் ஒன்றிணைந்து
ஓங்காரக்குடில் நோக்கி வந்து இனிதே

8. ஆற்றல்மிக்க தர்மத்தில் பொருளுதவி செய்ய
அரங்கனோடு இணைந்து தொண்டு செய்ய
இந்த அற்புதம் சடுதி நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–